1995 மார்ச் 15]

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு நுகர்வோர் நீதிமன்றம் ஏற்கனவே இயங்கி வருகிறது.

(ஆ) எனவே, அடுத்த கேள்வி எழவில்லை.

திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நுகர்வோர் நீதிமன்றங்களில் உள்ள உறுப்பினர்களின் பதவிக் காலம் எத்தனை ஆண்டுகள்? உறுப்பினர்களின் எண்ணிக்கை மாற்றி அமைக்கப்படுமா? அந்தந்த மாவட்டத்தில் உள்ள உறுப்பினர்களைத் தவிர, வேறு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்படுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்களுடைய பதவிக் காலம் 5 ஆண்டுகள் அல்லது 65 வயதுக்குட்பட்டவர்களாக இருக்க வேண்டும். அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான் உறுப்பினர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 5, திரு. எஸ். ஆசைமணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

5—

சீதக்கமங்கலத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

*39433—திரு. எஸ். ஆசைமணி:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், சீதக்கமங்கலம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், சீதக்கமங்கலம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை.

திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீதக்கமங்கலம் கிராமத்திலும், அதைச்சுற்றியுள்ள 15 கிலோ மீட்டர்

அளவிற்கு உள்ள சுற்றுப்புறங்களிலும் வேறு ஆஸ்பத்திரி எதுவும் இல்லாத காரணத்தால், இந்தக் கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து, வருகின்ற ஆண்டிலாவது இந்த சுகாதார நிலையத்தை அமைத்துத் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அரசினுடைய வழிமுறைகளைப் பற்றி இந்த மன்றத்தில் பலமுறை நான் தெரிவித்திருக்கிறேன். ஒரு ஒன்றியத்தை ஒரு யூனிட்டாக எடுத்துக் கொண்டு, அதிலே எவ்வளவு மக்கள் தொகை இருக்கிறதோ, அதற்கேற்ப ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பது என்பது மத்திய அரசின், மாநில அரசினுடைய கொள்கையாக வைக்கப்பட்டு இருக்கிறது. அந்த அடிப்படையிலே 30 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்று முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது. அந்த வகையிலே இந்த ஒன்றியத்திலே 98,769 மக்கள் தொகை என்று கணக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஏற்கனவே 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கிற காரணத்தால், புதிதாக அமைக்கின்ற சாத்தியக்கூறுகள் இல்லை என்று நான் தெரிவித்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 6, திரு. எஸ்.எம். துரை, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

6—

திண்டுக்கல் நகரில் ஆட்டோக்களில் மீட்டர் பொருத்துதல்

*21810–**திரு. எஸ்.எம். துரை:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) திண்டுக்கல் நகரில் ஓடும் ஆட்டோக்களில் மீட்டர் பொருத்தப்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமங்களைக் கணக்கில்கொண்டு, விரைவில் மீட்டர் பொருத்துவதற்கு உத்திரவிடப்படுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்